பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
12 08 2024 **MONDAY** 6 30 **PM**
வணக்கம் - மாநில செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.
2. மாதிரி சூரிய மின்சக்தி கிராமத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.
3. மகளிர் உரிமைத்தொகை பெற தகுதியுடையவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.
4. தேசிய அளவில் சிறந்த உயர் கல்வி நிறுவனங்களுக்கான தரிவரிசைப் பட்டியலில் சென்னை ஐஐடி முதலிடத்தை பிடித்தது.
5. இங்கிலாந்து ஓப்பன் ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Sugi Sai Bala Singa** வெள்ளிப்பதக்கம் வென்றார்.

**>>>>>><<<<<<**

விவசாயிகளின் விளைபொருட்களுக்கு உரிய சந்தை வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் மத்திய அரசு உறுதியுடன் உள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக வேளாண் துறை அமைச்சர் திரு. சிவராஜ் சிங் சௌஹான் வெளியிட்டுள்ள சமூகவலைதளப் பதிவை சுட்டிக்காட்டி அவர் இக்கருத்தை பதிவு செய்துள்ளார்.

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ளும் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**>>>>>><<<<<<**

மாதிரி சூரிய மின்சக்தி கிராமத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

மாவட்டந்தோறும் ஒரு கிராமம் என்ற அடிப்படையில் இந்த திட்டம் செயல்படுத்தப்படவுள்ளதாக எரிசக்தி துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்படும் கிராமங்களுக்கு மத்திய அரசின் மானியமாக 1 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிராமங்கள் எரிசக்தியில் தன்னிறைவை எட்டும் நோக்கில் இந்த திட்டம் செயல்படுத்தப்படுவதாகவும், இதற்காக 800 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

தமிழகத்தில் 261 ஊரக குடியிருப்புகளுக்கான குடிநீர் திட்டப் பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

காணொலி வாயிலாக அவர் இப்பணிகளை தொடங்கி வைத்ததாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த குடிநீர் திட்டங்கள் 461 கோடி ரூபாய் செலவில் செயல்படுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் மூலம் திருவள்ளூர், தேனி, கன்னியாகுமரி மாவட்ட மக்கள் பயனடைவார்கள் என்று அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

மகளிர் உரிமைத்தொகை பெற தகுதியுடையவர்கள் மீண்டும் விண்ணப்பிக்கலாம் என்று வருவாய்த்துறை அமைச்சர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

விருதுநகர் மாவட்டம், நள்ளி ஊராட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், 15 அரசு துறைகளின் சேவைகள் மக்களுக்கு எளிதில் கிடைக்க வேண்டும் என்ற நோக்கில் மக்களுடன் முதல்வர் என்ற புதிய திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

அரசு திட்டங்களின் பலன்கள் மக்களை சென்றடைவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்க, இது உதவிடும் என்று திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கூறினார்.

**>>>>>><<<<<<**

செம்மொழி தினம் அடுத்த ஆண்டு முதல் ஜூன் மாதம் 3ஆம் தேதி கொண்டாடப்படும் என்று தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் கூறியுள்ளார்.

இன்று உதகமண்டலத்தில் நடைபெற்ற தமிழ் ஆட்சிமொழி பயிலரங்கில் கலந்து கொண்டு அவர் பேசினார்.

தமிழ் வளர்ச்சிக்காக அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபட வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

**>>>>>><<<<<<**

திண்டுக்கல் மாவட்டம், பழநியில் நடைபெறவுள்ள முத்தமிழ் முருகன் மாநாட்டில் ஒரு லட்சம் பேர் பங்கேற்பார்கள் என்று எதிர்பார்ப்பதாக இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு. சேகர்பாபு கூறியுள்ளார்.

இந்த மாநாடு நடைபெறவுள்ள பழநியாண்டவர் ஆண்கள் கலைக்கல்லூரியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு அவர் பேசினார்.

வரும் 24 மற்றும் 25ஆம் தேதிகளில் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இந்த மாநாட்டிற்கு வரும் பக்தர்களுக்கு தேவையான உணவு, குடிநீர், தங்குமிடம் போன்ற வசதிகள் ஏற்படுத்தி தரப்படும் என்றும் அவர் கூறினார்.

முருகப்பெருமானின் பெருமைகளை கூறும் வகையில், கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்படுவதாக திரு. சேகர்பாபு தெரிவித்தார்.

**>>>>>><<<<<<**

தூத்துக்குடி மாநகர மக்கள் வரும் காலங்களில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் கூறியுள்ளார்.

தூத்துக்குடி – முத்தையாபுரம் இடையேயான உப்பாத்து ஓடை தூர்வாரும் பணியை இன்று தொடங்கி வைத்து அவர் பேசினார்.

மழைக்காலங்களில் கோரம்பள்ளம் குளம் நிரம்பினால் இந்த ஓடை வழியாக தண்ணீர் கடலுக்குச் செல்லும் என்று கூறிய அவர், இதில் உடைப்பு ஏற்பட்டதன் காரணமாகத் தான் குடியிருப்பு பகுதிக்குள் தண்ணீர் புகுந்ததாக குறிப்பிட்டார்.

இதனை கருத்தில் கொண்டு இந்த ஓடையின் கரைகளை பலப்படுத்தும் பணி நடைபெற்று வருவதாகவும் திருமதி. கீதாஜீவன் கூறினார்.

**>>>>>><<<<<<**

நாடுமுழுவதும் நடைபெற்று வரும் இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தில் பொதுமக்கள் ஆர்வத்துடன் பங்கேற்று வருகின்றனர்.

இதற்காக அஞ்சலகங்களில் தேசியக்கொடி விற்பனையும் நடைபெற்று வருகிறது.

தேசியக்கொடி ஏற்றும் இயக்கம் தொடர்பான விழிப்புணர்வு பேரணிகளும் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக திருப்பூர் மாவட்டம், தெக்கலூரில் உள்ள பள்ளியில் 78 ஆயிரம் மாணவர்கள் தேசியக்கொடியை ஏந்தியவாறு, பத்மாசனம் செய்து சாதனை படைத்தனர்.

78-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு 78 வினாடிகள் பத்மாசனத்தில் ஈடுபட்டதாக இதில் பங்கேற்றவர்கள் தெரிவித்தனர்.

(வாய்ஸ் பைட் - பங்கேற்றோர் 54 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<<**

தேசிய அளவில் சிறந்த உயர் கல்வி நிறுவனங்களுக்கான தரிவரிசைப் பட்டியல் இன்று வெளியிடப்பட்டது.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இதனை வெளியிட்டார்.

இதன்படி, ஒட்டுமொத்த பிரிவில் சென்னை ஐ.ஐ.டி முதலிடத்தைப் பிடித்தது.

சிறந்த பல்கலைக் கழகத்திற்கான பட்டியலில் பெங்களூருவில் உள்ள இந்திய அறிவியல் கழகமும், கல்லூரிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் தில்லி **Hindu** கல்லூரியும் முதலிடத்தை பிடித்தன.

**>>>>>><<<<<<**

தமிழகத்தில் தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல தலைவர் திரு. பாலச்சந்திரன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், மாநிலத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த 4 தினங்களுக்கு மழைக்கு வாய்ப்புள்ளதாகவும், சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றும் கூறினார்.

(சவுண்ட் பைட் - பாலச்சந்திரன் 62 செகண்ட்ஸ்)

**>>>>>><<<<<<**

<u>மாவட்டச் செய்திகள்</u>

காஞ்சிபுரம் மாவட்டத்தில் போதைப்பொருளுக்கு எதிரான விழிப்புணர்வு பேரணியை மாநில அமைச்சர் திரு. தா.மோ. அன்பரசன் இன்று தொடங்கி வைத்தார்.

**>>>>>><<<<<<**

திண்டுக்கல் மாவட்டம், கொடைக்கானலில் 5 கோடி ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. கயல்விழி செல்வராஜ் இன்று வழங்கினார்.

**>>>>>><<<<<<**

மத்திய அரசின் மக்கள் தொடர்பகம் சார்பில் பெரம்பலூர் மாவட்டத்தில் அரசு நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி, பெரம்பலூர் ராசி திருமண மண்டபத்தில் நாளையும், நாளை மறுநாளும் நடைபெறுகிறது.

**>>>>>><<<<<<**

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள அஞ்சல் அலுவலகங்களில் விற்பனை செய்யப்படும் தேசியக்கொடியை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

**>>>>>><<<<<<**

திருப்பத்தூர் மாவட்டத்தின் காவல்துறை கண்காணிப்பாளராக திருமதி. ஸ்ரேயா குப்தா பொறுப்பேற்றுக் கொண்டார்.

**>>>>>><<<<<<**

தூத்துக்குடி மாவட்டத்தில் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவு திட்டத்தின் கீழ் தொடர்ந்து பயன்களை பெற விரும்புவோர் தங்களது **KYC** விவரங்களை இ-சேவை மையத்தின் மூலமாக இணைக்குமாறு ஆட்சியர் திரு. லட்சுமிபதி கேட்டுக் கொண்டுள்ளார்.

**>>>>>><<<<<<**

மேட்டூர் அணையிலிருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு இன்று மாலை முதல் வினாடிக்கு 35 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

**>>>>>><<<<<<**

விளையாட்டுச் செய்திகள்

இங்கிலாந்து ஓப்பன் ஜூனியர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Sugi Sai Bala Singa Gopinath Singh** வெள்ளிப்பதக்கம் வென்றார்.
ஆடவர் 19 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.

**>>>>>><<<<<<**

**Congo-**வில் நடைபெற்ற சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Prajwal Dev – Adil Kalyanpur** இணை பட்டம் வென்றது.

**>>>>>><<<<<<**

பாரிஸ் பாராலிம்பிக் போட்டிகள் வரும் 28ஆம் தேதி தொடங்குகின்றன.

இந்தியாவின் சார்பில் 84 பேர் இதில் பங்கேற்கின்றனர்.

**>>>>>>END<<<<<<**